பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 CO

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 19 ஞாயிற்றுக்கிழமை (03-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 38

# தெற்கு பல்கலைக்கழகங்கள் அனைத்தும் செயலிழந்தன

## திறப்புகளை பீடாதிபதிகள் உபவேந்தர்களிடம் கையளிப்பு

கொழும்பு, ஜனவரி 3

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தவிர்ந்த நாட்டில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் அனைத்தும் நேற்று முதல் முற்று முழுதாகச் செயல் இழந்தன என்று அறிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பீடாதிபதிகள் தமது பதவிகளை கூண்டோடு இராஜினாமாச் செய்து, தமது பொறுப்பில் இருந்த பல்கலைக் கழகக் கட்டடங்களைப் பூட்டித் திறப்புகளை உபவேந்தர்களிடம் கையளித்தனர். அதையடுத்தே பல்கலைக் கழகங்கள் அனைத்தும் செயல் இழந்தன.

சம்பள உயர்வுக் கோரிக்கைகளை முன்வைத்துப் போராடி வரும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது போராட்டத்தின் உச்சக்கட்ட நடவடிக்கையாகவே அவர்களது பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளங்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

பெரும் தாக்குதல்களை ஆரம்பிக்க

## ஆயுதங்களை எதிர்பார்த்து இராணுவம் காத்திருக்கிறது

கொழும்பு, ஜன. 3

★ புலிகளுக்கு எதிரான போரில் படையினர் இனிமேல் மிகவும் நவீன ரக ஆயுதங்களைப் பாவிக்க உள்ளனர்.

★ அத்தகைய ஆயுதங்கள் மற்றும் இராணுவ தளபாடங்கள் வந்து சேரும் வரையே இராணுவம் தாக்குதல் எதையும் ஆரம்பிக்காமல் காத்துக் கொண்டிருக்கிறது.

—இத்தகவல்களை புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி ஒருவர் வெளியிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் மற்றும் அதிவேகப் பீரங்கிப் படகுகள் ஆகியவை இன்னும் வந்து சேரவில்லை.

அவை வந்து சேரும் வரையே இராணுவம் தாக்குதல்களை ஆரம்பிக்கக் காத்திருக்கிறது.

இந்த நவீன ஆயுதங்களின் மூலம் மோதலை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்றும் இராணுவம் எதிர்பார்க்கிறது.

அதிகரித்து வரும் புலிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள எமது படைகளை முடுக்கி விட்டிருக்கிறோம்.— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார், (உ-த)

## சமாதானத் தீர்வு காண்பதன் மூலம் நாடு பிளவுபடுவதைத் தடுக்க முடியும்

### எண்கோண மண்டபத்திலிருந்து பிரேமா அறிவிப்பு

கண்டி, ஜன. 3

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதன் மூலம் நாடு துண்டாடப்படுவதை — பிளவுண்டு போவதைத் தடுக்க முடியும்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதே நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களின் முக்கியமான அபிலாசை ஆகும்.

கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் இருந்து நேற்று ஜனாதிபதி ஆர் பிரேமதாசா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசா பதவி ஏற்று நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று கண்டி தலதா மாளிகையில் விசேட மதவைபவங்களும், ஆசிவழங்கும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன, அதன் பின்னர் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் நீண்ட உரையில் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

உலகில் எந்தவொரு நாட்டிலும் ஆயுதங்களை உபயோகித்ததன் மூலம் சமாதானம் ஏற்பட்டதாக வரலாறுகள் தெரிவிக்கவில்லை.

இந்த நாட்டில் சகல இன மக்களும் சமாதானத்துடன் வாழ்வதற்கு நிலைத்திருக்கக் கூடிய அமைதி ஏற்படுத்தபட வேண்டும். கொடிய ஆயுதங்களின் மூலம் எந்தக் காலத்திலும் நிலையான சமாதானம் ஏற்பட்டது கிடையாது.

புத்தபிரான் அருளிய போதனைகளின் பிரகாரம் நான்கு மிகச் சிறந்த ஆயுதங்கள் இருக்கின்றன. அவை கொடிய ஆயுதங்களைப் பார்க்கிலும் மிகுந்த சக்தி வாய்ந்தவை

கருணை, இரக்கம், பரிவு நடுவு நிலைமையைப் பேணுதல் என்பனவே அந்த நான்கு புனித கோட்பாடுகளுமாகும்.

[5 ஆம் பக்கம் பார்க்க]

### பிரேமா தமிழில் உரை

கண்டி, ஜன. 3

கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் இருந்து நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது ஜனாதிபதி பிரேமதாசா தமிழிலும் பேசினார். இந்த நிகழ்ச்சி ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது.

அவர் தமது பாணியில் தமிழில் உரையாற்றுகையில் இவ்வாறு சொன்னார்:-

எனது அன்புள்ள நாட்டு மக்களே!

இந்தப் புதுவருடம் மேலான சுகம் தரட்டும். சமாதானம், கட்டுப்பாடு, சுபிட்சம் ஏற்படட்டும். எங்கள் வாக்குறுதி இதுவாகும்.

சமாதானத்துக்கு கட்டுப்பாடு அவசியம். சமாதானம், கட்டுப்பாடு மூலம் சுபிட்சம் ஏற்படும்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

### மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 3

கிளாலிக் கடல் பகுதியில் நேற்றிரவு மோதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவந்தது. (உ-15)

### படையினருக்கு பதவி உயர்வுகள்

கொழும்பு, ஜன. 3

படையினருக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக அரசாங்கம் அதிக எண்ணிக்கையான அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகளை வழங்கி வருகிறது.

கடற்படையில் இம்மாதம் முதலாம் திகதி 15 பேர் லெப்டினண்டுகளாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். அதே போல விமானப் படையில் 45 விமானிகள், விமானப் படை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்

### முச்சந்தி முரளி



அப்ப ..... ஆயுதங்களைப் பறிகொடுக்கக் காத்திருக்கினம் எண்டு சொல்லுங்கோ ... ...!

## அரச அதிபர், பணிப்பாளர் பலாலி இராணுவ முகாமில்!

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும், கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கமும் மற்றும் யாழ். ஆஸ்பத்திரி அதிகாரிகள் இருவரும் நேற்று பலாலி இராணுவ முகாமில் தங்கி இருந்ததாக அறிய வருகிறது

பருத்தித்துறை காங்கேசன் துறை ஊடாக பலாலி சென்று அங்கிருந்து அவர்கள் விமானம்மூலம் கொழும்பு செல்ல விருந்தனர்.

எனினும் விமான சேவையில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக அவர்களது பயணம் தாமதமாகியுள்ளதாகத் தெரியவந்தது.

இன்று அல்லது நாளை அவர்கள் அங்கிருந்து விமானம்மூலம் கொழும்பு செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-15)

## தொண்டா மீது நீதிமன்ற நடவடிக்கைக்கு ஏற்பாடு?

கொழும்பு, ஜன. 3

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து வெளியேறிய மூத்த உறுப்பினர்கள் சிலர் அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

காங்கிரஸின் நிதி நடவடிக்கைகள் சரியாகக் கையாளப்படவில்லை என்று குற்றஞ்சாட்டியே நீதிமன்ற நடவடிக்கையில் ஈடுபட அவர்கள் உத்தேசித்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன

திரு. தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை தமது குடும்பச் சொத்தாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்து வருவதாகக் குற்றஞ்சாட்டி அந்த அமைப்பின் 16 சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் விலகியிருந்தனர்.

★ மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சர் பதவியை திரு. தொண்டமான் தமது மகனுக்குப் பெற்றுக்கொடுத்தது

★ எயர் லங்கா திருச்சி அலுவலகத்தில் பொறுப்பாளராகப் பணியாற்றிய தமது பேரனை, அதிலிருந்து விலகச் செய்து, இலங்கைக்கு அழைத்து இ. தொ. காவின் நிதி விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமித்தது.

★ திரு. செல்லச்சாமி மாகாண சபையிலிருந்து விலகியபோது அப்பதவியை அவரது மனைவிக்கு மாற்றுவதற்கு அனுமதித்தது.

★ காங்கிரஸின் நிதியை ஒழுங்கு முறையின்றி செலவு செய்வது— ஆகிய முறைகேடுகளையும் அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர் (அ-6)

இடைத்தேர்தல் 15 ஆம் திகதி

## அ. தி. மு. க - இ. காங்கிரஸ் பழநியில் நேரடி மோதல்?

சென்னை, ஜன. 3

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ தி மு. கவுக்கும், மத்தியில் ஆட்சி நடத்தும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு கேள்விக்குரியதாக இருக்கும் இவ்வேளையில்—

தமிழகத்தில் பழநி நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அ. தி. மு. க. — இந்திரா காங்கிரஸ் கட்சிகளிடையே தற்போது ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலை காரணமாக இரு கட்சிகளும் இந்த இடைத்தேர்தலில் கூட்டணி உறவை முறித்துக் கொண்டு எதிர் எதிராகப் போட்டியிடும் சந்தர்ப்பம் ஏற்படும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

அத்தகைய நிலை ஏற்பட்டு அ. தி. மு. க, காங்கிரஸ் வாக்குகள் பிரிந்தால் அது தி. மு க. வேட்பாளர் வெற்றி பெறக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கிடையில்—

ஜலந்தர், கொட்டப் பாலம் ஆகிய லோகசபைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தேயிலை உற்பத்தியினால் கிலோவுக்கு ரூ.22 நஷ்டம்!

### ஏற்றுமதியில் பெரும் வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 3

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், சாதாரண தேயிலை ஒரு கிலோவின் உற்பத்தி விலை 55 ரூபாவாகவும், உற்பத்திச் செலவு 77 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

இதனால் தேயிலை உற்பத்தி நிறுவனங்களுக்கு கிலோ ஒன்றுக்கு 22 ரூபா நஷ்டம் ஏற்படுகிறது.

ஏற்கனவே தேயிலை ஏற்றுமதியில் 300 கோடி ரூபா வீழ்ச்சியடைந்துள்ளது.

பி. பி. ஸி சிங்கள சேவையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது

திடீர் ஜனாதிபதித் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு அரசு தோட்டத் தொழிலாளர்களதும் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலை ஊழியர்களதும் ஆகக் குறைந்த சம்பளத்தை 2 ஆயிரம் ரூபாவரை அதிகரித்துள்ளது. இதனால் தோட்டங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

அச்சுக்கோர்ப்பாளர்கள்
புத்தகம் கட்டுபவர்கள்

முன் அனுபவமும், திறமையும் உள்ளவர்கள் 06-01-1993 புதன்கிழமை காலை 9மணிக்கு முகவரிக்கு நேரில் வரவும்

சாந்தி இல்லம்,
டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(23858)



## S. L. A. S.

[இலங்கை நிருவாக சேவை]

விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கும், அரச ஊழியர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

1993 ஜனவரியில் நடைபெறவிருக்கும்

**போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம்: 06 - 01 - 1993
பிற்பகல் 2 மணி

பாடநெறி: நிரகித்தல், நுண்ணறிவு, விடய ஆய்வு/பொதுவினாத்தாள்

- ★ விரிவுரைகள் — புதன், வியாழன், சனி, ஞாயிறு (2 p.m. — 5 p.m.)
- ★ பலதனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை.
- ★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
- ★ கட்டணம் ரூபா 350/- (முழுப் பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு:

ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-1892)



## O/L DAY CLASSES

ஆரம்பம்:- 05 - 01 - 1993
காலை 8 - 00 மணி

O/L. ஆண்டுகள் 10, 9க்குரிய மாலை நேர வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-4085)



## நந்தி அறோட்டுமா
NANDHI ARROW ROOT POWDER

தரம் உயர்ந்ததும், கலப்படம் அற்றதுமான தூய அறோட்டுமா யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்து உயிரியல் துறையினரால் போதிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வயிற்றோட்டத்துக்கு மருந்தாகவும் சிறுவர்கள், நோயாளர்களுக்கான சிறந்த சத்துணவாகவும் அறோட்டுமா பயன்படுகின்றது. கேக், புடிங் போன்றவை தயாரிப்பதற்கும் இதனைப் பயன்படுத்தலாம்

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

கூகைநீறு

போதிய அளவு கூகைநீறு கைவசம் உண்டு. கொள்விலையை குறிப்பிட்டு எழுதவும்

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

1. பீடாதிபதி, விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம், கிளிநொச்சி
2. பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

பதிவாளர்,
யாழ் பல்கலைக்கழகம்

(சி-1084)



## உதயன் அக்கடமி

(யாழ். மாநகரசபை முன்பாக)

பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**ஆண்டு 4,5,6,7,8,9,10,11**

வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 05-01-1993

✱ யாழ். நகர முன்னணி கல்லூரி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை ★

- ★ பிரதி வகுப்புகளான மாணவர் எண்ணிக்கை 30 ஆக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
- ★ மாதாந்தப் பரீட்சை, அச்சடித்த பாடக் குறிப்புகள்.

(சி/4089)



## தாதிப் பயிற்சி நெறி
DIPLOMA IN NURSING

**28 - 01 - 1993 இல்**
ஆரம்பமாகின்றன.

1. தாதியர் பயிற்சிப் பாடத் திட்டங்கள் (20 பாடங்களை உள்ளடக்கியது)
2. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி
3. பதிவு பெற்ற தாதியப் போதனாசிரியர்களின் விரிவுரைகள்
4. உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
5. ஒரு வருட காலப் பயிற்சி.
6. இலவச ''அக்கு பங்சர்'' வைத்தியப் பயிற்சி.

குறிப்பு: மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவசப் பயிற்சி.

அதிபர்

**சாயி மருத்துவக் கல்லூரி,**
(பதிவு பெற்றது)

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.

(சி-2879)



## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI.

## VACANCY

Applications are invited from suitable qualified candidates for the following post

**ASSISTANT LECTURER**
(MATHEMATICS)

**Qualification:**
B. Sc. Hon or B Sc Gen. of a recognised university with Mathematics

**Experience:**
Minimum of three years teaching experience after graduation. Preference will be given to those with teaching experience in similar institutions

**Salary;**
Negotiable, depending on qualification & experience

Apply with full Bio-Data to the
DIRECTOR
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI

[illegible] 15th January 1993

(C-4043)


## இன்றைய உதைபந்தாட்டம்

அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும்— 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 2. 45 மணி:- சென் நீக்கிலஸ் வி.க. அணி எதிர் சென் றோக் வி.க அணி

★ மாலை 4. 00மணி:- பாடும்மீன் வி.க அணி எதிர் சென் அன்ரனீஸ் வி.க அணி

இந்த ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

## நாளை

யாழ்ப்பாணம் ஜன. 3

கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர்களுக்கான கருத்தரங்குகள் அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் செயலகங்களில் நாளை காலை 10 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வைகுண்ட ஏகாதசி

குடாநாட்டில் உள்ள ஸ்ரீ நாராயணன் ஆலயங்களில் நாளை திங்கட்கிழமை வைகுண்ட ஏகாதசி உற்சவமும் செவ்வாயன்று துவாதசி உற்சவமும் நடைபெறவுள்ளன.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நாளை காலை 4.30 மணிக்கு விசேட உருத்திரா அபிசேகமும் 6 மணியளவில் சொர்க்கவாயில் தரிசனமும் 9 மணிக்கு ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி உற்சவமும் நடைபெறும்.

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் காலை 10 மணிக்கு மூலவர் அபிசேகமும், பூசையும் மீண்டும் பி. ப. 3. 30 மணிக்கு மூலவர் அபிசேகம், வசந்தமண்டபப்பூசை, சுவாமி எழுந்தருளல் ஆகியன இடம் பெறும். இரவில் விசேட நிகழ்ச்சிகளாக வயலின் இசை, கதாப் பிரசங்கம், வேணுகான இசை, நாதஸ்வர இசையமுதும் என்பன நடைபெறும்.

★ ★ ★

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை ஸ்ரீவைகுண்ட ஏகாதசி உற்சவம் சிறப்பாக நடைபெறும்.

★ ★ ★

கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள நாச்சியம்பாள் ஆலயத்தில் எழுந்தருளி உள்ள குருவாயூரப்பனுக்கு நாளை மாலை 6 மணி தொடக்கம் செவ்வாய் காலை 6 மணிவரை விசேட அபிசேகம், பூசை என்பன நடைபெறும். செவ்வாய் அதிகாலையில் விஸ்வரூப தரிசனம் இடம்பெறும் நாளை இரவு முழுவதும் பஜனை, ஆன்மீகப் பேருரைகள் என்பன இடம்பெறும். (அ-51)


★ கணிதம் Dக்கு உத்தரவாதம் ★

O/L 93
உடன் நாடுங்கள்

**நியூ மற்ஸ் அக்கடமி**

வானவில் முன்பாக
ஆரியகுளம் சந்தி.
யாழ்ப்பாணம்.

**ஆண்டு 10,9,8,7,6**

புலமைப்பரிசில்
**ஆண்டு 5**

MATHS
சங்கர்

★ தனிப்பட்ட முறையில் கணிதம் கற்க விரும்புகிறவர்களும் தொடர்புகொள்ளவும்.

(சி. 2896)



## எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
411/1, K. K. S. RD.
JAFFNA.

**ஆண்டு 10 O/L**
புதிய வகுப்புகள்
விஞ்ஞானம்

இரா. செல்வவடிவேல்

ஆரம்பம்:
05-01-93 பி. ப. 3மணி

(23899)



## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**O/L**

DAY CLASSES
பிரிவு I (8-00 — 2-00)
EVENING CLASSES
பிரிவு III (3-15 — 6-00)
SAT. & SUN. CLASSES
பிரிவு I (8-00 — 3-00)

**பிரிவு - II**

**ஆண்டுகள் 6, 7, 8, 9, 10**
(3-15 — 6 மணி வரை)

**ஆரம்பம்: 05 - 01 - 1993**

முக்கிய குறிப்பு:
6, 7, 8, 9, 10க்கான பிரிவு-III மட்டுமே ஆரம்பிக்கப்படவுள்ளதால், பெயர்களை முன் கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

- ★ ஒவ்வொரு பிரிவுகளுக்கும் குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.
- ★ மாணவர்களுக்கு மாதாந்தப் பரீட்சை நடத்தப்படும்.
- ★ கணிதம், விஞ்ஞான வகுப்புக்கள் வாரத்தில் நான்கு நாட்கள் நடத்தப்படும்.

(சி-4055)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண அபிவிருத்திக்கு ஒன்றரைக் கோடி ரூபா!

## புத்தாண்டில் மாநகரசபை செலவிடும்

அரியாலை, ஜன. 3

இவ்வாண்டில் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கென யாழ். மாநகரசபை ஒன்றரைக்கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மேற்படி அபிவிருத்தி வேலைத் திட்டம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக அமையும் என்று அறிவிக்கப்படுகிறது.

யாழ். நகரமத்தியில் நவீன மலசலகூடம், சிறுவர் பூங்கா அமைத்தல், வீதிகள், ஒழுங்கைகள், கால்வாய்கள், குளங்கள் என்பனவற்றைப் புனரமைத்தல்.

யாழ். மாநகரசபைக்கென புதிய அச்சகம் ஒன்றை உருவாக்குதலும், அதன் வேலைத் தலத்தை விஸ்தரித்தலும், யாழ்ப்பாணத்தில் உள்ள மகப்பேற்று நிலையங்களை புனரமைப்புச் செய்தல்.

இதேவேளை—

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் இவ்வருடம் குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள 2 மில்லியன் ரூபாவை மாநகரசபை ஒதுக்கியுள்ளது. (த-17)

# செக்கோஸ்லேவேகியா நாடு இரண்டாகப் பிரிந்தது

பிறாட்டிஸ்லோவா ஜன 3

74 ஆண்டுகளாக ஒரே நாடாக சமஷ்டி அமைப்பின் கீழ் இயங்கி வந்த செக்கோஸ்லேவேகியா கடந்த வெள்ளி முதல் இரண்டு தனி நாடுகளாக — செக் என்றும் ஸ்லோவக் என்றும்— பிரிந்தன.

ஸ்லோவக் இன மக்கள் தங்கள் நாடு இறைமையுள்ள சுதந்திர நாடாக இருக்க வேண்டும் என்று கோரி வந்ததைத் தொடர்ந்து, செக்கோஸ்லேவேகிய நாடாளுமன்றத்தில் இரு நாடுகளாகப் பிரிந்து செல்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி ஸ்லோவக் வெள்ளி முதல் இறைமையுள்ள சுதந்திரக் குடியரசு நாடாக அதன் பிரதமரால் பிரகடனம் செய்யப்பட்டது. (த-எ)

# தமிழக அரசு கலைப்பு பற்றி சுவாமி!

பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சி நடத்திய மாநில அரசுகளைக் கலைக்க என்ன காரணங்கள் அடிப்படையாக இருந்தனவோ, அவற்றை விட முக்கியமான காரணங்கள் தமிழகத்தில் அ. தி. மு. க. அரசைக் கலைப்பதற்கு உள்ளன.

ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சென்னையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் நரசிம்மராவ் தாம் பாரபட்சமற்றவர் என்பதை நிரூபிக்கவேண்டும் என்றால் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

# காரைநகர் மாணவருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 3

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் (1992) சித்தியடைந்த காரைநகரைச் சேர்ந்த 16 மாணவர்களையும் பாராட்டி பரிசில் வழங்கும் வைபவம் யாழ்ப்பாணத்தில் இடியல் கல்வி நிலையத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கும், வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலயத்தில் மறுநாள் 7ஆம் திகதி காலை 9 மணிக்கும் நடைபெறும்.

# ரூ. 2 லட்சத்துக்கு முத்திரைகள்

குடாநாட்டு தபால் நிலையங்களுக்குத் தேவையான முத்திரைகள் வந்துசேர்ந்துள்ளன. 'குமண' கப்பலில் 2 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள் எடுத்து வரப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இதனால் முத்திரைத் தட்டுப்பாடு நீங்கிவிட்டது


இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும்

"ராக பாவம்"

## நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்:- மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்;- 06 - 02 - 1993 — 08 - 0 - 1993

நுழைவுச் சீட்டு:-

நாள் ஒன்றுக்கு: 500/-, 50/-

பொன் சுந்தரலிங்கம்,
தலைவர்.

(சி-3920)



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்புக் கோட்டம்

## பொதுக்கூட்ட அறிவித்தல்

இடம்:- சித்தன்கேணி கணேச வித்தியாசாலை
காலம்:- 04 — 01 — 1993 (திங்கள்)
நேரம்:- மாலை 3-00 மணி
நிகழ்வு:-

1. ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்
2. புதுவருட நிர்வாகக்குழு தெரிவு

அனைத்து நிறுவன நிர்வாகிகளையும், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- செயலாளர்.

(5699)



## அங்லோ ஏசியன் பேர்ட்டிலைசேர்ஸ்

கம்பனி வழங்கும்.....

## "சுமிசிடின் சுப்பர்"
## SUMICIDIN SUPER

வெங்காயம், கத்தரி, கோவா,
உருளைக்கிழங்கு, போஞ்சி
போன்ற பயிர்களைத் தாக்கும்
தாள் கோதிப்புழு, தண்டுதுளைப்பான்,
கோவா மயிர்கொட்டிப் புழு, டயமன் முதுகு வண்டு
மற்றும்
பூச்சிகளையும் திறம்பட கட்டுப்படுத்துகின்றது.

பீடை நாசினிகள் விற்பனையாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்

(சி-2863)



## BITSMANS

கல்வி நிறுவனம்.
மானிப்பாய்.

புதிய பிரிவு

## SPOKEN ENGLISH
WITH
GRAMMAR

By
M. A. ஹரி
B A. Dip-in-eng

ஆரம்பம்:
06 - 01 - 1993
புதன் பி ப. 4 - 30

விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்

(சி/2884)



# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்

# PATRICIAN INSTITUTES

## தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

### 01. Computer Processing Courses

1. Computer Programming in BASIC Language and MS-DOS
Duration: 4 Months Commencing: 11 - 01 - 1993
2. Word Processing and MS-DOS (Word Star - 4000)
Duration: 3 Months Commencing: 11 - 01 1993

WEEK DAY CLASSES (Theory and Practicals)

3. d Base III Plus and MS-Dos
Duration; 4 Months Commencing: 16 - 01 - 1993
4. LOTUS 1-2-3 (Spread Sheet Analysis) and MS-DOS
Duration; 4 Months Commencing: 16 - 01 1993

WEEK END CLASSES (Theory and Practicals)

★★ Equipment Used: LASER XT/2, XT/3, 386 and Bitcom Computers (IBM Compatibles)

★★ Qualification: G. C. E. (O/L)

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 11 - 01 - 1993 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

### 02. Civil Draughtsmanship and Quantity Surveying

Course Covers:

(i) Draughtsmanship
(ii) Engineering Drawing
(iii) Building Construction
(iv) Civil Engineering Materials
(v) Building Quantity
(vi) Building Materials

★★ Qualification: G. C E. (O/L) Duration: 6 Months

### 03. City and Guilds of London Examination - Year 93/94

1. Quantity Surveying
2. Electrical, Electronic Engineering Technician
Part I & II

Subjects: i) Engineering Science & Circuits
ii) Power
iii) Electronic

★★ Qualification: G. C. E. (O/L)

Part - III

Subjects: i) Advance Electrical Technology
ii) Generation Transmission & Distribution of Electrical Energy

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

★★ Qualification Part II சித்தி எய்தியோர் மட்டும்

### 04. Special English Classes

இலக்கணத்துடன் க.பொ.த.(சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

### 05. Toefl (Test of English as a Foreign Language)

Duration: 4 Months

### 06. Short - Hand and Typing (English)

சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

### 07. Motor Mechanism

மோட்டார் வாகனம் திருத்துதல் காலம் - 6 மாதங்கள்

### 08. Air Condition and Refrigeration

காலம் - 4 மாதங்கள்

### 09. Motor Winding

மோட்டார் வைண்டிங் காலம் - 4 மாதங்கள்

### 10. Electrical Wiring

மின்சார இணைப்பு காலம் - 3 மாதங்கள்

### 11. General Electrician

ஜெனரல் எலக்ரீஸியன் காலம் - 4 மாதங்கள்

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்

1. அடிப்படை மின்சாரம் (AC/DC) — Basic Electricity
2. மோட்டார் வைண்டிங் — Motor Winding
3. ஆமேச்சர் வைண்டிங் — Armature Winding
4. ரான்ஸ்போமர் வைண்டிங் — Transformer Winding
5. வீட்டு மின்னிணைப்பு — House Wiring
6. எல்லா விதமான மின் உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல் — Repairing of All Type of Electrical Equipments

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றிஷன் இன்ஸ்ரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
Patrician Institute of Higher Studies
59, St Patrick's Road,
JAFFNA

(சி-4081)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 698/15, சபாபதி வீதி, (வைரவர் கோவிலடி) தலையாழி, யாழ்ப்பாணம். (23859)

லுமாலா சைக்கிள் விற்பனைக்குண்டு. ஏசியா சைக்கிள் பார்வையிட்டவர் தயவு செய்து சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவு . (4500/-) க. புவனசுந்தரம், 1010/9, கே. கே. எஸ். வீதி, [தலையாழி ஒழுங்கை], யாழ்ப்பாணம். (23878)

2 முதிரை கட்டில்கள், 2 தேக்குஅலுமாரிகள, 2முதிரை Show C se விற்பனைக்கு உண்டு. வே திருநாவுக்கரசு பெரி - மதவடி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் (சுன்னாகம் நூல் நிலையத்திற்கு எதிராக மதவடியில் முதலாவது ஒழுங் கயில் 3ஆவது வீடு (5687)

## தேவை

மெதடிஸ்த திருச்சபை பரி. லூக்கா வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி உடனடியாகத் தேவை. M. B. B. S., M P தரத்திலுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. The Manager St. Lukes Hospital, Puttur (5692)

## வேலை ஆட்கள் தேவை

டீ மேக்கர், சப்ளை செய்வோர் வேலைக்குத் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். ஆரியபவான் சைவ உணவகம். கைதடிச் சந்தி கண்டி வீதி, கைதடி. (23852)

## மணமகள் தேவை

அண்மையில் தாரம் இழந்த யாழ். இந்து 42 வயது. பொறுப்புகள் அற்றபட்டதாரிக்கு எளிமையான திருமணத்துடன் வெளிநாடு வரக்கூடிய மணமகள் சொந்தக் கையெழுத்தில் முழுவிபரங்களுடன் 06-01-93க்கு முன் விண்ணப்பிக்கவும். இல: 476, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (23889)

## Maths

ஆண்டு 5இலிருந்து G.C.E (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி (23820)

## மணமக்கள் தேவையா?

மணமகன், மணமகள் தேட விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சந்திப்பு: சனி காலை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23842)

## O L கணிதம்

Distinction பெறுபேறடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவம் உள்ள B Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [23887]

## நூல் விற்பனை

நான் கடவுள் (நூல்) நான் யார்? ஸ்ரீசத்யசாயிபாபா, ஸ்ரீரமண பகவானின் ஆத்ம தத்துவஞான உரைகளுடன் வர்ணப் படங்களும், எங்கும் விற்பனையாகின்றன பாடசாலைப் புத்தகங்கள், உபகரணங்கள், சஞ்சிகைகள் கலண்டர்கள் பஞ்சாங்கங்கள், பொங்கல் வாழ்த்துக்களுக்கும் ஆனந்த்ஸ் புத்தக நிலையம், 12/8 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் மொடர்ன் புத்தகசாலை, நெல்லியடிச் சந்தி. (5474)

## திருமண சேவை

அனேக வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் உண்டு. விருப்பத்துக்கு ஏற்ப தெரிந்து எடுக்கலாம். சனி, ஞாயிறு, புதன் 9—2 மணி வரை ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல: 158, கோவில் வீதி, நல்லூர் (23890)

## சோதிடம்

தீராத கடன் தொல்லை, தொழில் நட்டம், கல்விக் குழப்பம், விவாகம் நடவாமை, சாபதோஷங்கள் நீங்கி, அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் நேரில் வரவும். சாந்தி பரிகாரங்கள் கூறுவதுடன் யந்திரங்களும் வழங்குகிறோம். ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 158 கோவில் வீதி, நல்லூர். (23891)

## Situation Vacant

Post of House Keeper Applications invited from English Educated young Lady Spinster, Independant Healthy person with knowledge of English Typing and ability to keep accounts in English medium from respectable Christian or Hindu Family Free from encumbrances apply in own handwriting stating age Date of birth, qualifications and religion apply advertiser No. 475 C/oUthaya , Jafna (சி-4080)

# கண்ணீர் மாலைகள்

## திருமதி அன்னம்மா சண்முகம்

யாழ் கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகரில் தீராத பக்தி கொண்டு இவ்வாலய வளர்ச்சிக்கு பேருதவி புரிந்தவரும் எம்மால் அம்மம்மா என அழைக்கப்பட்டவருமான திருமதி சண்முகம் அவர்கள் விநாயக விரத (சஷ்டி) பூர்த்தியன்று தனது மனுஷ வாழ்வையும் பூர்த்தியாக்கி, கணங்களுக்கு அதிபதியான கணபதியின் பாதார விந்தத்தை சென்றடைந்துவிட்டார்.

என்னே அற்புதம் இதுவல்லவோ விநாயகரின் திருவருள்

அவர் ஆத்மா சாந்திபெற விநாயகரை வேண்டுகிறோம்.

இங்ஙனம்:

துரையப்பா ஐயர், பிள்ளைகள்
(ஆலய ஆதீன கர்த்தாக்கள்.)

(23886)

# தேவை


## மொழி பெயர்ப்பாளர்கள்

1. இலத்திரனியல்.
2. தொழில் நுட்பம்.

திறமையும் முன் அனுபவமும் உள்ளவர்கள் 10 - 01 - 1993ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

இல: 474,
C/o உதயன், யாழ்ப்பாணம். (23857]

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் வாரி இராஜகிளி

[சுரேஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

திதி: 03 - 01 - 1993

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 19 - 04 - 1941 | 14 - 01 - 1992 |

நாவாந்துறை மண்ணில் தவழ்ந்து, அரியாலை மண்ணில் மண முடித்து, ஆசைக்கு இரண்டு புதல்வர்களையும் ஐந்து புதல்விகளையும் பெற்று, அதில் கடைசி ஆண் குழந்தையை இழந்து தவித்த நிலையிலும், எங்களை பாசத்துடன் வளர்த்து ஆளாக்கி அன்பிற்கு மூன்று பேரப்பிள்ளைகளை கண்டு தூக்கி மகிழ்ந்து வந்த வேளையில், பொங்கலுக்கு முதல் நாளில் கடைசி குழந்தை சென்ற இடத்திற்கு எம்மை எல்லாம் தவிக்க விட்டு சென்று விட்டீர்களே பப்பா!

பப்பா உங்களின் உடலைத்தான் இழந்தோம். உங்களின் உயிர் மீண்டும் ஒரு ஆண்டுக்குள் எங்களிடமே திரும்பி வந்துவிட்டது. நீங்கள் தெய்வமாக இருந்து எங்களுக்கு வழி காட்டுவீர்கள். ஓராண்டு சென்றாலும் உங்களின் திருவுருவம் எம்மை விட்டு அகலாது இதயத்தில் நிலைத்திருக்கும்.

உங்கள் நினைவில் ஏங்கும்;

அன்பு மனைவி, ஆசைப்பிள்ளைகள்.
மருமக்கள், ஆசைப் பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், நண்பர்கள்.

660, கண்டி வீதி,
அரியாலை. [23867

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 30 — 06 — 19.4 | 27 — 12 — 1990 |

அமரர்

## சித்திரவடிவேல் நேசரத்தினம்

திதி: 03 — 01 — 1993

வாழ்வு முழுவதும் வற்றாது வழங்கி,
வாழவைத்த எம் அன்புத் தெய்வமே!
காலங்கள் எத்தனை கரைந்து போனாலும்,
கரையுமோ எமது கண்ணீர் வெள்ளம்!

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள், தாய்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரங்கள்.

தொண்டமனாறு. (சி-4083]

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 04 — 04 — 1931 | 10 — 01 — 1990 |

## செல்லத்துரை சிவதாசன்

(சிவபாதம்)

திதி: 03—01—1993

எங்கள் குடும்ப விளக்கு அணைந்து இரண்டாண்டுகள் சென்றும், உங்கள் நினைவில் நிற்கும்;

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஏழாலை மேற்கு, ஏழாலை. (5472)

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 — 05 — 1912 | 14 — 01 — 1992 |

## அமரர் கந்தையா சிவகுரு

(12ஆம் வட்டாரம் - புங்குடுதீவு)


திதி: 03 - 01 - 1993

அன்புடனும், பாசத்துடனும் எங்களை எல்லாம் வளர்த்து, சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

24/3, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (5696)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 — 01 — 1912 | C4 — 12 — 1992 |

## அமரர் கந்தையா சிவசுப்பிரமணியம்

(பொன்னுத்துரை)

அன்பின் பிறப்பிடமாய் அணையாத பெருவிளக்காய் இன்பமெலா மெமக்கீந்த இருநிதியே - உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

எமது துக்கத்தில் கலந்து கொண்டு, பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கனகரட்ணம் வீதி,
வட்டுக்கோட்டை. (23850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மகாநாயக்கரின் விருப்பத்தின் அர்த்தம்

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டுத் தீர்வு ஒன்றை உடனடியாகக் காணுமாறு அஸ்கிரிய பீடாதிபதியான பலிப்பான சந்தானந்த மகாநாயக்க தேரர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தி உள்ளார். ஜனாதிபதி பிரேமதாசா ஆசிர்வாதம் பெறச்சென்ற வேளை மகாநாயக்க தேரர் இவ்வாறு அவரிடம் நேரில் வலியுறுத்திக் கூறி இருக்கிறார். தீர்வானது சிறுபான்மை மக்களின் நியாயமான உரிமைகளை வழங்குவதாகவும் பெரும்பான்மைச் சமூக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதாகவும் அமைய வேண்டும் என்றும் மகாநாயக்க தேரர் சுட்டிக்காட்டி உள்ளார்.

பௌத்த மகா சங்கம் தென் இலங்கை அரசியலில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் சக்தி வாய்ந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். பௌத்த மகா சங்கத்தின் மூன்று பிரிவுகளினதும் உயர்பீடங்களின் அதிபதிகளாக விளங்கும் மகாநாயக்க தேரர்கள் அரசுகளையும் தலைவர்களையும் ஆக்கவும் வல்லவர்கள்; அழிக்கவும் வல்லவர்கள்.

ஆனால் அவர்கள் இந்த நாட்டின் பிரதான பிரச்சினையாக விளங்கும் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்பதில் உள்ளார்த்தமாக இது வரை அக்கறை காட்டவில்லை. மிகக் குறிப்பாகத் தமிழர்களின் உரிமைகளை வழங்கி அவர்களை இந்நாட்டின் பிரசைகளாக, சரி சமமாக நடத்த வேண்டும் என்பதில் ஆர்வமில்லாதவர்களாக இருந்தனர்.

தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் எந்தத் திட்டமானாலும் அது சிங்கள நாட்டைத் தமிழர்களுக்கு விற்கும் தீர்வு என்று வர்ணிக்கும் அரசியல்வாதிகளுக்கு ஆதரவளிக்கும் போக்கே, மகாசங்கத்தினரிடம் கடந்த 35, 40 வருடங்களாக இருந்து வருகிறது. தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் தீர்வுத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டை போட்ட "பெருமையே" மகா சங்கத்திற்கு உண்டு.

ஆகையால் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் ஜனாதிபதிக்குக் கூறிய புத்திமதி, தேரரது உள்ளத்திலிருந்து வந்ததா அல்லது உதட்டளவிலே கூறிய வார்த்தைகளா என்ற சந்தேகம் எழுவதைத் தவிர்க்கமுடியாது.

அஸ்கிரிய பீடாதிபதியின் அடிமனதிலிருந்து எழுந்த விருப்பம் இதுவென்று எடுத்துக் கொண்டாலும் கூட மல்வத்த, ராமாண்ய பீடாதிபதிகளும் இந்தக் கருத்துக்கு உடன்பாடு தெரிவிப்பார்களா என்பது முதலாவது கேள்வியாகும். அவர்கள் தங்கள் மனங்களை மாற்றிக் கொண்டுள்ளார்களா என்பது அஸ்கிரிய பீடாதிபதிக்கே தெரிந்திருக்காது. அது ஒருபுறமிருக்க....

சிறுபான்மை மக்களின் நியாயமான உரிமைகள் என்று அஸ்கிரிய பீடாதிபதி எவற்றை மனதில் கொண்டுள்ளார்? தெரிவுக்குழு வகுத்துள்ள வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் தீர்வையா? அல்லது சிங்களப் பாதுகாப்பு சபையும், மடிகே பஞ்ஞாசிக தேரர் போன்ற பௌத்த குருமாரும் முன்வைத்துள்ள தமிழருக்குப் பாதுகாப்பும், காணி வளமும் வழங்க மறுக்கும் வெற்று மாகாண சபைகளையா?

யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் பாழாகிறது. போர்க் களத்தில் சிங்களச் சிப்பாய்கள் பெரும் எண்ணிக்கையில் பலியாகிறார்கள். இவற்றைத் தடுக்க யுத்தத்துக்கு முடிவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வும் தேவை என்று மகாநாயக்க தேரர் கருதினால் மட்டும் போதாது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் எவை என்பதையும் புரிந்து கொள்வது முக்கியம்.

# சகல வசதிகளுடனும் உற்சாகமாக வாழும் கெற்பேலி பண்டிதர் குடியிருப்பு மக்கள்!

[2]

கெற்பேலி குடியிருப்பு மக்களுக்கு மருத்துவ வசதியும் வழங்கப்படுகிறது அங்கு இதுகாலவரை பெரிதாக தொற்று நோய்கள் ஏதும் பரவி அழிவுகளை ஏற்படுத்தியதில்லை. காரணம் அங்கு சுகாதார மற்றும் மருத்துவ வசதிகளை உடனுக்குடன் கவனித்து பரிகாரம காணப்படுவதேயாகும்.

குடியிருப்பில் மருத்துவச் சாலை ஒன்று இயங்கி வருவதால், நோயாளர்கள் சிகிச்சை பெற வசதியாக உள்ளது. ஓர் உதவி வைத்திய அதிகாரியும், இரு தாதியரும் அங்கு கடமையில் உள்ளனர்.

கடுமையான நோயால் எவரும் பாதிக்கப்பட நேர்ந்தால் அவர் உடனடியாக சாவகச்சேரி அல்லது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார். அதற்கான போக்குவரத்துச் செலவை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரே ஏற்றுக் கொள்கின்றனர்.

குடியிருப்புக்கென நிரந்தரமாகவே பொது சுகாதார அதிகாரி [PHI] ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். துடிப்பான அந்த இளைஞர் ஆர்வத்துடன் அங்கு பணியில் ஈடுபட்டு வருகிறார். அதே சமயம் கர்ப்பிணித் தாய்மார்களைக் கவனிக்க மருத்துவ மாது ஒருவரும் கடமையில் உள்ளார். கர்ப்பிணிகளுக்கு விசேட கிளினிக்குகளும் நடக்கின்றன.

கர்ப்பிணிகள் பால் கொடுக்கும் தாய்மார்கள் குழந்தைகளுக்கு போசாக்குமிக்க

**நேரடி றிப்போர்ட்**

உணவுகளையும் கழகத்தினர் வழங்கி வருகின்றனர்.

குடியிருப்பில் கர்ப்பவதிகள் 53 பேரும், பால் ஊட்டும் தாய்மார் 29 பேரும், ஒரு வயதுக்குக் குறைந்த பாலகர்கள் 60 பேரும் இருக்கின்றனர் என்பதை அங்கிருந்த புள்ளி விவரப்பட்டியலில் இருந்து கண்டறிய முடிந்தது.

குடியிருப்பு மக்களுக்குப் போதிய தண்ணீர் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. குடியிருப்பில் இரு பெரிய கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது குழாய்க் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அதே சமயம் குடியிருப்பு மக்களும் தத்தமது பகுதிகளில் சிறு கிணறுகளைத் தோண்டியுள்ளனர் மணற் பிரதேசமாகையால் கிணறுகள் நீடித்திருப்பதில்லை. அவை திடீரென சரிந்து விழுகின்றன.

குடியிருப்பு வாசிகளில் பலர் விவசாயத்தில் ஆர்வம் காட்டுகின்றனர். தமது சிறு குடியிருப்புக்கு பக்கத்திலேயே சிறிய அளவில் அவர்கள் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். 15 ஆயிரம் மரவள்ளித் தடிகளை த. பு. கழகத்தினர் விநியோகித்துள்ளனர் தக்காளி, கத்தரிக் கன்றுகளும் மற்றும் பல்வேறு வகையான மரக்கறி விதைகளும் வழங்கப்பட்டுள்ளன. போட்டி அடிப்படையில் அவர்களிடையே தோட்டச் செய்கையை கழகத்தினர் உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

அவற்றைவிட குடியிருப்பின் ஒதுக்குப்புறம் ஒன்றில் 3 ஆயிரம் மிளகாய்ச் செடிகள் நடப்பட்டுள்ளன. அங்குள்ள சிலர் தாமே முன்வந்து மிளகாய்ச் செய்கையில் இறங்கியுள்ளனர்.

அதே சமயம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அங்கு மரமுந்திரிப் பண்ணை ஒன்றை நடத்தவும் திட்டமிட்டுள்ளது. அதன் ஆரம்ப கட்டமாக 200 மரமுந்திரிக் கன்றுகள் அங்கு நடப்பட்டுள்ளன. அவை கவனமாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன

குடியிருப்பு அமைந்துள்ள பகுதி பழைய தென்னந்தோட்டம். அங்கு தென்னைகள் பல இப்பொழுதும் உள்ளன. அவற்றில் இருந்து பெறப்படும் தேங்காய்கள் அங்குள்ளவர்களுக்கு மலிவான விலை

## எழுச்சிக் கிராமமாகத் திகழ்கிறது அது

யில் பங்கிட்டு விநியோகிக்கப்படுகின்றன.

குடியிருப்பில் மரணங்கள் ஏற்படும்போது செலவுக்கென ஆயிரம் ரூபா பணமும் மற்றும் பொருள்களும் வழங்கப்படுகின்றன. 25 கிலோ அரிசி, 4 கிலோ பருப்பு, 3 கிலோ சீனி, 2 பைக்கற் பால்மா, தேயிலை என்பனவற்றை த. பு. கழகம் உடனடியாக வழங்குகிறது.

கெற்பேலிக்கான கிராம சேவையாளர் மற்றும் தீவுப் பகுதி கிராம சேவையாளர்கள் சிலரும் குடியிருப்பு மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகின்றனர்.

### தொழிற் பயிற்சி

அங்குள்ள மக்களுக்கு தையற் பயிற்சி, பன்னவேலைப் பயிற்சி போன்றவையும் வழங்கப்பட்டு வருகின்றன. 38 பேர் தற்போது தையல்பயிற்சி பெற்று வருகின்றனர்.

புதுவருடத்தில் அங்குள்ள சுமார் 900 மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது அதற்கான வேலைகள் குடியிருப்பில் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அதன் பொருட்டு 3 ஆண்களும், 6 பெண்களும் தையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்கான முழுச்செலவையும் கழகத்தினரே ஏற்றுள்ளனர்.

### கடனுதவி

இவை ஒருபுறமிருக்க, குடியிருப்புவாசிகளுக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் கடன் வழங்கும் திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆயிரம் ரூபா முதல் 4 ஆயிரம் ரூபா வரையான பணம் அவர்களுக்குக் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

கடன் பெறுபவர்கள் வாராந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 368 பேர் இந்த கடனுதவியைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

குடியிருப்பின் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் திரு. த. சச்சிதானந்தனும் திட்ட வகுப்பாளர் திரு. க. மகிந்தனும் இவற்றை புள்ளி விவரங்களுடன் எமக்கு எடுத்துக் காட்டி விவரித்தனர். குடியிருப்புவாசிகளுக்கு இந்தளவு உதவிகள் வழங்கப்படுவதை நேரில் அறிந்து கொண்ட நாம் திகைத்துப் போனோம்

### அகதிகள் என்பதை மறந்துபோயினர்

மதியம் சரிந்து பிற்பகல் 2 மணி.

பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு திரு. சச்சிதானந்தனுடன் நாம் குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றி வரப் புறப்பட்டோம்.

குடியிருப்பின் பல பகுதிகளையும் நாம் அவதானித்தபடி நகர்ந்து கொண்டிருந்தோம். இடம்பெயர்ந்து வந்து குடியேறியுள்ள மக்களுக்கு இந்தளவு உதவிகள், வசதிகள் [illegible] கண்டு ஆச்சரியப்பட நேர்ந்தது அங்குள்ளவர்களுக்குத் தாம் அகதிகள் என்ற நினைப்பே இருப்பதாகத் தெரியவில்லை. அந்தளவு சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் அவர்கள் காணப்பட்டனர்.

குடியிருப்புக்களில் பெரும்பாலும் தாய்மார்களும் இளம் பெண்களும், சின்னஞ்சிறுசுகளுமே பகலில் காணப்பட்டனர்

சின்னஞ்சிறுசுகள் கவலையின்றி இழுபறிப்பட்டும், ஓடிப்பிடித்தும், கல்லுக்கட்டியும் தம்மை மறந்த நிலையில் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தனர்.

இவற்றை எல்லாம் நேரில் அவதானித்த போது அந்தக் குடியிருப்பை இடம்பெயர்ந்த மக்கள் வாழும் பகுதியாக நினைக்க முடியவில்லை. 'உல்லாச விடுதிகள்' அடங்கிய ஓரிடத்துக்கு வந்து நிற்கிறோமோ என்ற சந்தேகம் எங்களை அறியாமலே தோன்றியது.

நாம் அந்தப் பகுதியைச் சுற்றி வந்து கொண்டிருந்த போது "இந்தளவு நெருக்கமாக மக்கள் வாழ்கின்றனரே, சச்சரவுகள் ஏதும் வருவதில்லையா? என்று திரு சச்சிதானந்தனிடம் கேட்டோம்.

அவர் சிரித்தபடியே "சிறு சிறு பிரச்சினைகள் வராமல் இல்லை அப்படி வந்தாலும் நாங்கள் தலையிட்டு தீர்த்து வைத்து விடுவோம்" என்றார்.

### சுத்தமாக உள்ளன

குடியிருப்பின் சுற்றாடல் பகுதி எங்கும் மிக சுத்தமாகவும், அழகாகவும் காணப்பட்டன. குப்பைகள் குழிகளினுள் போடப்பட்டிருந்தன. அநேக இடங்களில் குப்

**இன்பன்-குமாரன்**

பைகள் எரிக்கப்பட்டு இருப்பதையும் அவதானித்தோம்

சுகாதாரம் பேணப்படுவது குறித்து திரு. சச்சிதானந்தனிடம் கேட்டதற்கு அவர் சொன்னார் "இங்குள்ள ஒவ்வொரு வரிசைக்கும் (ஒரு வரிசையில் சுமார் 15 குடிசை வீடுகள்) அங்குள்ளவர்களில் ஒருவர் தலைவராக இருக்கிறார். அவர்தான் அந்த வரிசையில் உள்ளவர்களின் பிரச்சினைகளுக்குப் பொறுப்பு அது மட்டுமல்ல அந்தப் பகுதி சுகாதார முறைகளையும் அவரே மேற்பார்வை செய்ய வேண்டும்.

அவர்கள் அந்த மக்களை மேற்பார்வை செய்வதால், அநேகமான சிக்கல்களை அவர்களே தீர்த்துவிடுகின்றனர். இப்படிச் செய்வதால் தான் இந்தளவு ஒழுங்காகவும், சுகாதாரமாகவும் இந்தப் பகுதிகள் உள்ளன"— என்றார்.

நாம் பிரமிப்புடனும், திகைப்புடனும் திரு. சச்சிதானந்தத்துடன் ப. நோ. கூ. சங்கத்திற்குள் நுழைகிறோம். அங்கிருந்த அலுவலகர் 'நிவாரணம் வழங்கல்' குறித்து விளக்குகிறார்.

நிவாரணப் பொருள்கள் வந்து சேர்ந்தால், அங்குள்ள மக்களுக்கு இரவு பகல் என்று பாராமல தாங்கள் உணவுப் பொருள் விநியோகித்தலில் ஈடுபடுவதாக பெருமையுடன் கூறினார் அவர் 'கஷ்டப்பட்டு வந்த மக்களுக்கு உதவுவது தானே மனிதாபிமானம்' என்ற கருத்து மொழிகளையும் உதிர்த்தார் அவர்.

அடுத்து மருத்துவச்சாலைக்குள் நுழைந்தோம் அங்கு உதவி வைத்திய அதிகாரியான திரு. வே. தியாகராஜா கடமையில் இருந்தார். அவரிடம் எம்மை அவர்கள் அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் அங்கு ஆர்வத்துடன் கடமை புரிவதைக் கண்ணுற்றபடி அவரிடம் பேசத் தொடங்கினோம்

மருத்துவசாலையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 35 பேர் வரை சிகிச்சை பெற வருவதாக அவர் தெரிவித்தார். பெரும்பாலும் வயிற்றோட்டம், சிறுகாயங்கள் போன்றவற்றிற்கே சிகிச்சையளிக்க வேண்டியுள்ளதாகவும் சொன்னார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போதிய மருந்துகளை வழங்குவதால், தமக்கு சிகிச்சையளிப்பதில் சிரமம் ஏதும் இல்லை என்றும் அவர் கூறினார். குடியிருப்பில் சுகாதார நிலைமை வெகு முன்னேற்றகரமான நிலையில் இருப்பதால், அங்குள்ள சனத்தொகையில் நோயாளர் விகிதாசாரத்தில் மிகக் குறைந்தவர்களே நோய்ப் பாதிப்புக்கு ஆளாகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்த மருத்துவச்சாலையில் இரு இளம் பெண்கள் தாதியர்களாக கடமை புரிகின்றனர். அவர்கள் இருவரும் குடியிருப்பு வாசிகளே.

மருத்துவச்சாலையில் வைத்தியர் தியாகராஜாவிடம் விடைபெற்று திரு சச்சி அவர்களுடன் அலுவலகத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தோம். இடையில் வாசிகசாலை தெரிந்தது. அங்கே வாசகர்கள் கூட்டம் மற்றோர் இடத்தில் இளைஞர்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர்

இன்னும் இரண்டொரு தினங்களுக்கு இங்கு தங்கியிருந்து இங்குள்ள வாழ்க்கை முறைகளைக் கண்டறிந்தால் என்ன என்ற நினைப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகத்தை வந்தடைந்தோம் ஒரு நாளை அங்கு கழித்ததில் எம்மை அறியாத ஓர் ஆத்மார்த்த திருப்தி

(வளரும்)

## அயோத்தியில் பாலராமரை இந்துக்கள் தரிசித்தனர்

புதுடில்லி, ஜன. 3

அயோத்தியின் சர்ச்சைக்குரிய பகுதியில் அமைக்கப்பட்ட இராமர் ஆலயத்தை நேற்று இந்துக்கள் தரிசித்தனர்.

விக்கிரகங்கள் உள்ள இடத்திலிருந்து 6 மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்ட மணல் மேடை வரை சிறு சிறு குழுக்களாகச் சென்று, பக்தர்கள் வழிபட அனுமதிக்கப்பட்டனர்.

இக்கோயிலில் வழிபடுவதற்கு தம்மை அனுமதிக்க வேண்டும் எனக்கோரி கடந்த பல நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த அறுபது இந்துத் துறவிகளும் நேற்று அக்கோயிலில் பாலராமரை வழிபட்ட பின்னர் தமது உண்ணா நோன்பை கைவிட்டனர். (உ-5)

### சமாதானத்...'

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் புனித ஆயுதங்களை ஏந்தினால் நிலையான சமாதானத்துக்கான குறிக்கோளை அடைவதற்கு துணையாக இருக்கும்

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு ஒன்றைக் காண்பதே தற்போது அவசரத் தேவையாகும். சகல இன மக்களிடையேயும் சமாதான சகவாழ்வை ஏற்படுத்த இது பெரிதும் உதவும்

பாதுகாப்புச் செலவைக் குறைக்கவும் இது வழிகோலும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு கூடுதலான நிதியை இதன் மூலம் ஒதுக்க முடியும். பணவீக்கத்தைக் குறைப்பதற்கு இது பேருதவியாக இருக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக அப்பாவி மக்கள் பலரின் உயிரைப் பாதுகாப்பதற்கும் அது உறுதுணையாக இருக்கும். — இவ்வாறு அவர் கூறினார். (ஓ-க-6)

### பிரேமா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினை விமோசனம் தராது. அழிவு தான் ஏற்படுத்தும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையை நாம் எதிர்பார்க்கிறோம்.

எமது நாட்டின் ஏனைய பிரதேசங்கள் போன்று வடக்கு - கிழக்கையும் அபிவிருத்தி செய்ய நாம் தயார். அந்த மக்களுக்கு நீதி செலுத்துவது எமது கடமை என் மீது நீங்கள் மிகவும் விசுவாசம் வைத்திருக்கிறீர்கள். அதற்கு எனது கௌரவத்தை உங்கள் அனைவருக்கும் மீண்டும் தெரிவிக்கிறேன். நன்றி

— இவ்வாறு அவர் உரையாற்றினார். (ஒ)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 3

கொக்குவில் மாத்தனை கந்தசாமி கோவிலில் இன்று காலை 9 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெற்று மாலையில் விசேட பூசை நடைபெறும். [அ]

### நாளை பாடசாலைகள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜன 3

மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் இவ்வாண்டு முதலாம் தவணைக்காக நாளை திறக்கப்படவிருக்கின்றன. (உ-11)

### ஒளிவிழா இன்னிசை

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். பிரதான வீதி — நான்காம் குறுக்குத்தெருச் சந்தியில் இன்று மாலை 6 மணி முதல் ஒளிவிழாவும் இலவச இன்னிசையும் நடைபெறவுள்ளன. சாந்தன் இசைக்குழுவினர், ரங்கனுடன் சப்தஸ்வரா குழுவினர் ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சிகள் இவற்றுள் அடங்கும். (அ)

### வன்னியில் ஒலிபரப்பு சேவை

கொழும்பு, ஜன 3

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வன்னி ஒலிபரப்பு சேவை ஒன்றை ஆரம்பிக்க உள்ளது.

இது குறித்து கூட்டுத்தாபன தொழில்நுட்பக் குழு ஒன்று வவுனியாவில் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியது.

இச்சேவை அடுத்த வாரமளவில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இசைப் புலவர் சி. செல்லத்துரை
(கொடிகாமம்)

கொடிகாமத்தைச் சேர்ந்த இசைப் புலவரும், இளைப்பாறிய பாடசாலை அதிபரும், சமாதான நீதிவானும், உதயன் கொடிகாமம் செய்தியாளரும், வீரகேசரி தென்மராட்சிச் செய்தியாளருமான திரு. சின்னையா செல்லத்துரை நேற்று 2-1-93 ஆம் திகதி காலமாகிவிட்டார்.

இவர் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரனின் (ஜேர்மனி) அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று ஞாயிறு (3-1-93) பி.ப. 2 மணிக்கு கட்டைபறித்தான் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;
ஈஸ்வரி பவனம், கொடிகாமம்.
செ. இராசேஸ்வரி (மனைவி)

[23895]

## திருமதி தங்கரத்தினம் மாணிக்கவாசகர்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கரத்தினம் மாணிக்கவாசகர் 2-1-93 நேற்றுக் காலமானார். இவர் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், பவளராணி, புஷ்பராணி, இந்துராணி, வசந்தகுமார் (சுவிஸ்), கமலராணி (சுவிஸ்), வையந்திகுமார் (பிரான்ஸ்), ஜெயராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராமலிங்கம் (பிரான்ஸ்), சிவன்செயல் (சுவிஸ்), சந்திரசிங்கம், நந்தினி (சுவிஸ்), தவராசா (சுவிஸ்), நிமலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (3-1-93) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெரிய மதவடி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
க. மாணிக்கவாசகர் (கணவன்)

(5475)

## திருமதி கணபதிப்பிள்ளை நாகபூரணம்

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை நாகபூரணம் காலமானார். அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், நடராஜா, தியாகராஜா, அன்னலிங்கம், அன்னலட்சுமி, திலகவதி (பிரான்ஸ்), அகிலேஸ்வரி, லலிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜகோபால், பரராஜசேகரம், கருணாநிதி, தவேந்திரராஜா, நாகரத்தினம், புஸ்பலீலா, மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தேவராசாவின் சகோதரியும், சிவமுகுந்தன் (த.வி.பு.), கம்சத்வனி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிறு (03-01-93) நண்பகல் பன்னிரண்டு மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
சு. கருணாநிதி

(23894)

## திருமதி கனகசபை சிவக்கொழுந்து

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது 58, ஏ, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் வசித்து வந்தவருமான திருமதி கனகசபை சிவக்கொழுந்து 1-1-93 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கமுத்து தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற பொன்னையா — கற்பகம் (சின்னம்மா) தம்பதிகளின் மருமகளும், பிரபல வர்த்தகர் பொ. கனகசபையின் பிரிய பத்தினியும், சத்தியபாலன் (கனடா), சந்திரபாலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ச. ஜெயமாலா, ச. புஸ்பஞானி ஆகியோரின் அன்பு மாமியாரும், க. இலட்சுமி (நேரியகுளம்), ந. நல்லதங்கம், நா. செல்லையா ஆகியோரின் அருமைச் சகோதரியும், மு. நல்லம்மா, பொ. ஆச்சிப்பிள்ளை, காலஞ்சென்ற பொ. பரராசசிங்கம், கா. அன்னமுத்து, இ. கமலம், கா. அன்னபூரணி (இராசாங்கம்-கனடா) ஆகியோரின் மைத்துனியும், சு. தணிகாசலம் (ஆசிரியர், புங்குடுதீவு முதலாம் வட்டாரம்) தம்பதிகள், சி. தம்பிராசா தம்பதிகள் (புங்குடுதீவு 6ஆம் வட்டாரம்) ஆகியோரின் சம்பந்தியும், ச.சுஜாதா, ச. சுனித்திரா, ச. அகிலன், ச. நிசாந்தன், ச. பிரதீபராஜ், ச. றமணன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 3-1-93 இல் இல. 58, ஏ, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
58,ஏ பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
பொ. கனகசபை (கணவர்)
சி. சசிகாந்தன் (பேரன்)

(23885)

# பாரிஸ் பேச்சுக் குறித்து பி.பி.ஸி. வெளியிட்ட கருத்து

பாரிஸில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக வெளியான தகவல்களை இருதரப்பினருமே மறுத்துள்ளபோதிலும், அப்படி ஒரு சந்திப்பு நடந்திருப்பதாகவே தோன்றுகிறது

பி.பி.ஸியின் கொழும்பு முகவர் இவ்வாறு தெரிவிக்கிறார்.

ஜனாதிபதியும் அவரது அமைச்சர்களும் போரை முடிவுக்குக் கொண்டு வந்துவிடலாம் என்பதில் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள் எந்த அடிப்படையில் அவர்கள் இவ்வளவு நம்பிக்கையுடன் பேசுகிறார்கள் என்பதுதான் தெளிவாகவில்லை.

—இவ்வாறு பி.பி.ஸியின் விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### ஆசிரியர் சங்கச் செயலரின்

# போதனையாளர் பதவியை ரத்துச்செய்ய உத்தரவு

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் சேவையில் இருந்துகொண்டு, தொலைக் கல்வி போதனையாளர் (Tutor) பணிபுரிய வழங்கப்பட்டிருந்த சேவை உத்தரவு ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கான பணிப்புரையை யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் விடுத்துள்ளார்.

தொலைக்கல்வி மற்றும் கல்விப் போதனை விடயங்களுக்குப் பொறுப்பான தேசிய கல்வி நிறுவனத்தின் முடிவுக்கு அமையவே கல்விப் பணிப்பாளர் இந்த உத்தரவை விடுத்ததாக கல்வித் திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறிய வந்தது.

தொலைக் கல்விப் போதனாசிரியர் சேவை ரத்துச் செய்யப்பட்டிருப்பதால் திரு. த. மகாசிவம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து பணிபுரிய வேண்டும் என்றும் சுட்டிக் காட்டப் பட்டது. (உ)

## பத்திரிகையாளர் செல்லத்துரை காலமானார்

குடாநாட்டின் பழம்பெரும் பத்திரிகையாளர்களில் ஒருவரான இசைப்புலவர் சி. செல்லத்துரை நேற்றுக் காலமானார்.

உதயனின் ஆரம்ப காலம் தொடக்கம் கொடிகாமம் செய்தியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. செல்லத்துரை கடந்த மூன்று தசாப்தங்களாக யாழ்ப்பாணம், கொழும்புப் பத்திரிகைகளின் மூத்த செய்தியாளராக விளங்கினார்.

ஆசிரியர் சேவையைத் தமது பிரதான தொழிலாகக் கொண்டிருந்த அவர் சிறந்த இசை வல்லுநருமாவார்.

## தெரிவுக்குழு அறிக்கை மாத இறுதியில்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழிவகைகளைத் தெரிவிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது இறுதி அறிக்கையை இம்மாத இறுதியில் அல்லது பெப்ரவரி மாத ஆரம்பத்தில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா இத்தகவலை நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார் [ஒ-எ]

## தேயிலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் தொழிற் சாலைகளிலும் பணிபுரியும் ஊழியர்களின் வாக்குகளைப் பெற அரசு முயற்சிக்கிறது.

அதேசமயம்—

தேயிலை உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் உற்பத்தியைத் தொடர முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதே நிலைதான் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும் ஏற்படும். இவ் விரு துறைகளும் சுமார் 6 மாதங்களுக்குள் வங்குரோத்து அடையும் வாய்ப்பு உள்ளது என்று பொருளாதார வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

— இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## அ. தி. மு. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும்—

திரிபுரா, நாகலாந்து, மேகாலயா சட்டசபைகளுக்கான தேர்தல்களும்—

ஆந்திரா, பீஹார், கோவா, குஜராத், ஹரியானா, மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் உள்ள 30 சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களும் பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெறும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (உ-5)

## தெற்கு பல்கலைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவுக்கு பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் வழங்கிய காலக்கெடு நேற்றுடன் முடிவுற்றது.

தமது கோரிக்கைக்கு உரிய பதில் கிடைக்காததை அடுத்து ஆசிரியர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ததுடன், தமது பொறுப்பிலிருந்த ஆய்வு கூடங்கள், விரிவுரை மண்டபங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அறைகள் ஆகியவற்றைப் பூட்டி திறப்புகளை பீடாதிபதிகளிடம் கையளித்தனர் என்றும்—

பீடாதிபதிகள் தமது பொறுப்பிலிருந்த அனைத்துக் கட்டடங்களினதும் திறப்புகளை சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக உபவேந்தர்களிடம் கையளித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தைக் கூட தமக்கு எதிராகப் பிரயோகித்தாலும் தாம் எடுத்துள்ள தீர்மானத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை என பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

தாங்கள் கோரியுள்ள சம்பள அதிகரிப்பை வழங்க 50 கோடி ரூபா மட்டுமே செலவாகும் எனவும் — அதைப் பெற்றுத்தரும் சக்தி பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவிற்கு இல்லாவிட்டால், அது ராஜினாமாச் செய்யவேண்டும் எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில்—

பல்கலைக்கழகங்களினதும் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களினதும் சகல பிரிவு ஊழியர்களுக்கும் நிலுவை வேலைகளைப் பூர்த்திசெய்வதற்குரிய படியை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், சகல துணை வேந்தர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன அலுவிகார இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த விசேட கொடுப்பனவு [illegible] வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-6)

## பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்' ஜன. 3 வடக்கில் கடந்த நவம்பரில் இடம்பெற்ற ஜி.சி.ஈ. சாதாரணதர முன்னோடிப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று அல்லது நாளை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## சிவசம்பு சிவப்பிரகாசம்
(ஓய்வுபெற்ற பஸ் நடத்துநர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டு தொல்புரத்தில் வசித்த சிவசம்பு சிவப்பிரகாசம் 02-01-93இல் காலமானார். இவர் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகறஞ்சன் (பிரான்ஸ்), ஜீவறஞ்சனி (மூளாய் - அ. மி. த. க. பாடசாலை ஆசிரியை), பவானி (சிற்றி காமன்ற், இணுவில்), நந்தினி, தயாபரன் (விக்ரோறியாக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 2-1-93 இல் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்' நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
திருமதி இரத்தினேஸ்வரி.
பாபு வீதி, தொல்புரம்.

(23892)

## அருட்தந்தை இறிஸ்ரியன் ஒம்லோ அடிகளார்

அருட்தந்தை இறிஸ்ரியன் ஒம்லோ அடிகளார் [Christian Omlo (o. m. i ] கடந்த 21 திகதி கொலன்ட்டில் காலமானார். இவர் கடந்த 44 ஆண்டு காலமாக யாழ், மன்னார் மறைமாவட்டங்களில் அரும் பணியாற்றிய அருட்குரவர். இவர் ஊடாக இறைவன் எமக்கு செய்த நன்மைத்தனங்களுக்கு நன்றியாகவும், இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும், 4-1-93 திங்கள் மாலை 5.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் இரங்கல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இப் பலியில் இணைந்து கொள்ள இறைமக்களையும் அழைக்கின்றோம்.

தகவல்:
யாழ். ஆயர் குருக்கள்

(23896)

## நாகரெத்தினம் அன்னபூரணம்

சரவணை கிழக்கு பள்ளம்புலத்தை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னபூரணம் 02-01-1993 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்—கண்மணி அவர்களின் அன்பு மகளும், சந்தசாமி, செல்வரத்தினம், மகேஸ்வரி, இராசலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, காலஞ்சென்ற சரஸ்வதி, ஞானாம்பிகை, சிவபாக்கியம், கமலாம்பிகை, தேவிகாராணி, வசந்தமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலிங்கம், முத்துலிங்கம், சண்முகநாதன், துரைராசா, மகேந்திரராசா, காண்டீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, சந்திரா, சீவரெத்தினம், தர்மலிங்கம், தம்பையா இரத்தினம், சீவரெத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 03-01-1993 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோப்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
சு. செல்வரத்தினம் (முத்துலிங்கம்) (தம்பி)
இல. 200/1, பிறவுண் றோட், (நாலாம் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.
சரவணை கிழக்கு, பள்ளம்புலம் - 9

(23898)

## சின்னக்குட்டி தம்பிராசா

சண்டிலிப்பாய் காளி கோவிலடியைச் சேர்ந்த சின்னக்குட்டி தம்பிராசா காலமானார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (ரி. பாலன் அன்சன்ஸ், கோண்டாவில்). சிவகுருநாதன், சிவராஜா (விநாயகர் ஸ்ரோர், சண்டிலிப்பாய்), தருமரத்தினம், குணராசா (சவுதி), சிவபாக்கியம், விமலாதேவி, கமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நாகமுத்து (உதவி அரசாங்க அதிபர் காரியாலயம். கோப்பாய்), புஸ்பராணி, கலாவதி, நாகராஜா (ஆசிரியர், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), சறோஜாதேவி, ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழினி, கமலினி (யாழ். மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்), உமாரஷிகா, வாசுகி, உமாறமணன் விஜிதா, பால்ராஜ், பானுஜா, பிரதீபன் ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (ஞாயிற்றுக்கிழமை 3-1-93) பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சண்டிலிப்பாய் மத்தி, காளி கோவிலடி.

(23901)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org